**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 166/2021**

**நாள்.03.03.2026**

**பி.வா.சா. 1- முருகேசன்**

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குச் சொத்தான சர்வே எண்.297/2 புஞ்சையாக இருந்தது என்றால் சரிதான். சர்வே எண்.297/2 ஆதியில் என்ன விஸ்தீரணம் என்ன என்றால் 1 ஏக்கர் 42 செண்ட். மேற்படி 1 ஏக்கர் 42 செண்ட்டில் 42 செண்டினை வாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.297/2 ல் 1 ஏக்கர் 42 செண்ட்டில் நான் எவ்வளவு இடம் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 27 செண்ட், 21 செண்ட், 11 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன். மேற்படி 27 செண்ட், 21 செண்ட், 11 செண்ட் கிரையம் வாங்கியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சர்வே எண்.297/2 ல் நான் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் 40 வருடங்கள். நான் புஞ்சை வகைப்பாடாக இருக்கும்போது வீடு கட்டினேனா என்றால் ஆமாம். வாதிகள் அவர்கள் இடத்தில் வீடு கட்டியுள்ளார்களா என்றால் வீடு கட்டியுள்ளார்கள் காலியிடமும் உள்ளது தொழு வைத்துள்ளார்கள். வாதிகள் அவர்கள் இடத்தில் வீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 3 வருடங்கள். வாதிகளுக்கும் எனக்கும் நடைபாதை பிரச்சனை இருந்தது என்றால் வாதிகள் நடைபாதை கேட்டு பிரச்சனை செய்தார்கள். சர்வே எண்.297/2 நத்தமாக உட்பிரிவு செய்யப்படும்போது சர்வே எண்.297/2A முதல் சர்வே எண்.297/2L1, L2, L3 வரை உட்பிரிவானது என்றால் சரிதான். சர்வே எண்.297/2 நத்தமாக உட்பிரிவு செய்யப்படும்போது சர்வே எண்.297/2J என்பது காலியிடமாக வருவாய்த்துறை ஆவணங்களில் உள்ளது என்றால் சரியல்ல அந்த இடத்தில் வீடு உள்ளது. எனக்கும் வாதிகளுக்கும் இடையிலான சொத்து பிரச்சனையை 4 முதல் 7 பிரதிவாதிகளை தவறுதலாக கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

வாதிகளின் வழக்கு 4 முதல் 7 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:33:30 +0530